தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1970 நவம்பர் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 21, 22 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

மகாபலிபுரம் கடற்கரைக்குத் தடுப்புச் சுவர்

*23 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாபலிபுரம் கடற்கரைக் கோவிலை அடுத்துள்ள கடலில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. மகாபலிபுரம் கடற்கரைக் கோவில் மத்திய அரசின் பாதுகாப்பில் உள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம்: மகாபலிபுரம் கோயில் புராதனமான கோயில். அந்தக் கோயிலைப் பாதுகாக்கவேண்டியது மத்திய அரசின் பொறுப்பாக இருந்தாலும், நாமும் அதிலே ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அங்கு பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டியிருந்த தடுப்புச் சுவர் இப்பொழுது உடைந்திருப்பதால், அதை மத்திய அரசு புதுப்பிக்கவேண்டும் என்றாயினும் நம்முடைய மாநில அரசு சிபார்சு செய்யுமா? முன்பு தனுஷ்கோடியில் புயல் வந்த போது, இப்பொழுது ஆட்சியில் இருப்பவர்கள் முன்பு எதிர்க்கட்சியில் இருந்தபோது, அன்றைய சர்க்கார் தனுஷ்கோடியில் ஒரு தடுப்புச் சுவர் கட்டவில்லை என்று கூக்குரலிட்டார்களே அது ஞாபகம் இருக்கிறதா? அதையொட்டியாகிலும் மகாபலிபுரத்தில் தடுப்புச் சுவர் கட்டுவதுபற்றி இப்பொழுது ஆட்சியிலுள்ள நீங்களும் மத்திய சர்க்காரில் இருப்பவர்களும் ஒன்று சேர்ந்துவிட்டீர்களல்லவா? அதனால் இனியாவது முயற்சி எடுக்கக்கூடாதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கேள்வியில் பல்வேறு பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். மகாபலிபுரத்தில் கட்டப்பட்டிருக்கும்

[1970 நவம்பர் 27

கோயில் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் கீழ் இருந்து வருகிறது. ஆகவே, அது பாதுகாக்கப்பட வேண்டிய குறிப்பை இந்த அரசு அவர்களுக்கு எழுதியிருக்கிறது. அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அதுபற்றி ஆராய்ந்து அதற் கென்று வல்லுநர் குழுவொன்றை அமைத்து, அந்தக் குழுவினர் இரண்டுவித சிபார்சுகளை இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கடலலைகள் வந்து கோயில்களைப் பழுதுபடுத்தாத அளவுக்குத் தடுத்துநிறுத்துவதற்குப் பாதுகாப்பான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், கடற்காற்றின் காரணமாக அங்குள்ள பழைய சிற்பங்களும், மற்றவைகளும் அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்றும், அதற்குப் பல தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் யோசனைகளை வல்லுநர் குழு இந்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகவும், இந்திய அரசு அவற்றைப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரிடமிருந்து பதில் வந்திருக்கிறது. ஆகவே தான், அதுபற்றிய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் விடையிறுத்தேன். ஆனால், மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசு அதுபற்றி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள ஆயத்த மாக இருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடலலைகளைத் தடுக்க பல்வேறு நாடுகளில் அதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். பல இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப் பட்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். அதை வைத்துத்தான் அந்த யோசனை சொல்லப்பட்டது. யோசனையில் எந்தத் தவறும் இல்லை. அதில் நியாயம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. நிதி வசதியைப் பொறுத்துத்தான் அதை நிறைவேற்றுவது இருக்கிறதே தவிர, நியாயம் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் பொறுப்பில் மகாபலிபுரம் கோயில் இருந்தாலும், தஞ்சை பிரகதீசுவரர் கோயிலை எப்படி எடுத்துக்கொள்வதாக அரசாங்கம் கருதி கோரிக்கை விடுத் திருக்கிறதோ, அப்படிப்பட்ட கோரிக்கையை இந்த மகாபலிபுரம் கோயிலைப்பொறுத்தும் விடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மகாபலிபுரம் கோயிலைப்பொறுத்து இந்த அரசாங்கம் எழுதவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: மகாபலிபுரம் கோயில் மத்திய அரசின் பார்வையில் இருக்கிறது என்றும், ஆகவே மத்திய அரசுக்குத் தமிழக அரசு சிபார்சு செய்திருக்கிறது என்றும் அமைச்சரவர்கள் சொன்னார் கள். தடுப்புச் சுவர் கட்டுவதுபற்றி மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு ஏதாவது கடிதம் வந்ததா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, தொல்பொருள் ஆராய்ச்சித்துறை யினருடைய யோசனையின்பேரில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டு அந்தக் குழுவினர் ஆராய்ந்து இரண்டுவித கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். கடலலைகள் வந்து கோயிலைப் பழுதுபடுத்

1970 நவம்பர் 27]

தாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும், பல ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் சிற்பங்களும், மற்றவைகளும் கடற்காற்றின் காரணமாகப் பழுதுபடுவதால் அவற்றை சில அறிவியல் முறைகளில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அந்த வல்லுநர் குழு இரண்டு திட்டங்களை இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது, இந்திய அரசு அதைப்பற்றிப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரிடமிருந்து நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உலகப்புகழ் பெற்ற சிற்பங்களைப் பாதுகாக்கின்ற வகையில் இந்தத் தடுப்புச் சுவர் மகாபலிபுரத்தில் அமைப்பதற்காகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக் கமிட்டியினர் சிபார்சு செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் எவ்வளவு தொகை செலவு செய்வதாக உத்தேசம் இருக்கிறது? அந்த இரண்டு திட்டங்களுக்கும் முறையே எவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்பதையும் அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்புகள் நம்முடைய அரசாங்கத்திற்கு இன்னும் எட்டவில்லை. இந்திய அரசின் பரிசீலனையில் அவை இருக்கக்கூடும்.

எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு

* 24 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் தற்போது பின்பற்றி வரும் இறுதி தேர்வின் மொத்த மதிப்பெண்கள் 600 என்பதிலிருந்து 800 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் தமிழ்நாடு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பள்ளி இறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் பொதுநிலைப்படிப்பு (Academic Course) மற்றும் பலதிறப் படிப்புகளுக்கு (Diversified Course) உரிய உயர் மொத்த மதிப்பெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

படிப்புப் பிரிவு—	உயர்மொத்த மதிப்பெண்கள்.
பொதுநிலைப் படிப்பு	600
பல்திறப் படிப்புகள்—	
அலுவலக இயல் (Secretarial)	800
பொறியியல்	700
வேளாண்மை	600
மனை இயல் (Home Science)	600
ஓவியம் மற்றும் வண்ணம் பூசுதல் (Drawing and Painting)	600
இந்திய இசை	600
பஞ்சாலைத் தொழில் நுட்பம் (Textile Technology).	600